DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 174/2019**

**CNR.No: TNTH06-000311 -2021 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : குழந்தைதெரஸ் | Town | அனுமந்தன்பட்டி |
| Husband Name | : சகாயம் | Occupation | : |
| Age | : | **DW1** | |

---

நாள் : 15.04.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் பிவாசாஆ 12 ஆவணமாக தாக்கல் செய்யபட்ட ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஏற்கனவே DRO விசாரித்து உத்தரவு பிறப்பித்துள்ளார், அதற்காகத்தான் இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். பிவாசாஆ 12 ஆவணத்தில் 8 வது பக்கத்தில் மரியருள்பாக்கியம்பிள்ளையிடமிருந்து ஆவண எண். 2715/1981 ன்படி தானப்பெற்ற மேரி என்பவர் பெயரிலேயே அனுபவத்தின் அடிப்படையிலேயே பட்டா மற்றும் பத்திரப்பதிவு அனுபவம் செய்து வருவதாக எதிர்மனுதாரர் உரிமை கோருவது தெரியவருகிறது என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம், அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. வருவாய் துறை அலுவலர்கள் முறையாக விசாரணை செய்து பிவாசாஆ 12 ஆவண உத்தரவை பிறப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2) பிவாசாஆ 12 ஆவணத்தில் 9 வது பக்கத்தில் இடர்உற்றதாக கருதுவோர் தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முறையான விசாரணையின்றி பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை என் தரப்பில் பிவாசாஆ 12

ஆவணமாக தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிவுற்றது)

(ஒ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.